(5) ஒழுங்குப் பிரச்னை

கோட்டை நுழைவாயில்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வெளி மாநில காவலர் உறுப்பினர்களைத் தடுத்ததாகக் கூறப்பட்டது குறித்து

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். பேரவைத் தலைவரவர்களே, கோட்டையிலே உள்ள எல்லா கேட்டுகளிலும் வெளி மாநில போலீஸ் துப்பாக்கியோடு நின்றுகொண்டு மெம்பர்களையெல்லாம் தடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் கூட உள்ளே நுழைய முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களைக்கூடத் தடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு என்ன பந்தோபஸ்து என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி: என்னை இதில் உறுப்பினர் அவர்கள் இழுத்துவிட்டார்கள், அதனால் சொல்கிறேன். நான் சட்டமன்றத்திற்கு வரும்போது என்னைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆனால், என்னோடு வந்த பொறுப்புள்ளவர்களை, அமைச்சரைப் பார்க்க வந்தபொழுது தடுத்து நிறுத்திவிட்டார்கள். என்ன காரணம் என்று கேட்டபொழுது, அனுமதி வாங்கி வரவேண்டும்; என்.ஜி.ஓ-க்கள் ஸ்டிரைக் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அனுமதி வாங்கி வரவேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் தரப்படும். மற்றவர்கள் வந்தால், அவர்கள் அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டுதான் வரவேண்டும். நீங்கள் உங்களைத் தடுத்ததாகச் சொல்லவில்லை. உறுப்பினர் திரு. கந்தசாமியைத் தடுத்ததாகச் சொன்னீர்கள். அவர் தன்னைத் தடுக்கவில்லையென்றும் தன்னோடு வந்தவர்களை அனுமதிச் சீட்டு வாங்கி வருமாறு சொன்னதாகவும் சொல்லி விட்டார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: வெளி மாநிலக் காவலர்கள்—ஆகவே, அவர்களுக்கு உறுப்பினர்களை அடையாளம் தெரியாது—தடுத்து விடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களைத் தடுத்த தாகச் சொல்லவில்லை. மற்றவர்கள் வரவேண்டுமென்றால், அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும். உறுப்பினர்கள் வர எந்தத் தடையும் இல்லை. கூட வருபவர்கள் அனுமதி பெற்றுத் தான் வரவேண்டும்.

(4) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதோடு இந்த பம்ப் சாமான்கள், மின்சார சாமான் கள் எல்லாம் வாங்குவதிலே பெரிய பிரச்னைகள் இருந்து வருகின் றன. எங்கே வாங்குவது, யாரிடத்திலே வாங்குவது என்பது போன்றவற்றிற்குச் சுற்றறிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற சாமான்களை எல்லாம் கூட்டுறவு சிறப்பங்காடிகளில்தான் வாங்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியைப் பொறுத்தவரை, நாங்கள் கூட்டுறவு சிறப்பங்காடிக்குச் செல்ல வேண்டும் என்றால், கிட்டத்தட்ட 20, 25 மைலுக்கு அப்பாலே சென்றுதான் வாங்க வேண்டிய நிலையிருக் கிறது. அதனாலே எங்களுக்கு ஏற்படுகிற பயணப்படி விரயம்; நாள் விரயம்; ஆகவே, இவைகளை எல்லாம் கணக்கிலே பார்த்து, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் உங்கள் மூலமாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஊராட்சித் தலைவரை நம்பவில்லையென்றால்கூட, ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆணையாளரிடம் பம்புகளுக்குத் தேவையான சாமான்களை, மின்சார விளக்குகளுக்குத் தேவையான சாமான்களை அளித்து, எங்களுக்குத் தேவையான நேரத்தில் அவர் வழங்கக்கூடிய விதத்தில் ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஊராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்கான காரணம், ஊராட்சிகளையும், ஒன்றியங்களையும் இரண்டாகப் பிரிப்பதுதான் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அதனுடைய கெடு முடிந்து விட்டதாகவும் மாண்புமிகு